# மக்கள் ஆட்சியும் மன்னர் ஆட்சியும்

மன்னர் ஆட்சிக்காலம் பற்றி வரலாற்றில் வாசித்திருக்கின்றோம். சிறப்பாக நாட்டை ஆட்சி செய்தவர்களை அடையாளம் கண்டுள்ளோம். ஒருவர் ஆட்சிசெய்த நல்லாட்சியிலும் விட அடுத்து ஆளப்போகின்றவர் மேலும் சிறப்பாக ஆளவேண்டும் என எண்ணிச் செயற்பட்டவர்களையும் அவர்களின் பெரும்தன்மையையும் அறிந்துள்ளோம். அதே சமயம் சூழ்ச்சியினால் ஆட்சியை அபகரித்தவர்களையும் அவர்களின் ஏதேச்சார கொடிய ஆட்சியையும் கூட அவதானித்துள்ளோம்.

இலங்கையில் தமிழ் சிங்களப் பிரதேசங்களில் பல நூற்றாண்டு காலமாக இடம்பெற்று வந்த மன்னராட்சி கால வரலாற்றினையும் ஆட்சி செய்தவர்கள் கொண்டிருந்த பண்பையும் பணிவையும் அறிந்து வைத்திருக்கின்றோம்.

1505ம் ஆண்டு போர்த்துக்கேயர் வந்திறங்கியதும் படிப்படியாக மன்னராட்சிப் பகுதிகள் அன்னிய தேச ஆக்கிரமிப்பிலும் பின்னர் காலனித்துவ ஆட்சிக்குள்ளும் அடங்கியது. கிட்டத்தட்ட தலா 150 வருட ஆட்சிக்காலம் கொண்ட போத்துக்கேயர் (1505 – 1656) பின் ஒல்லாந்தர் (1656 – 1798) அதன்பின் ஆங்கிலேயர் (1798 – 1948) என அன்னியராட்சிக் காலம் ஓடி ஓய்ந்தது.

**பெரும்பான்மை இனத்துக்கு சார்பான மக்களாட்சி**

1947ல் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அன்னியர் ஆட்சியிலிருந்து ஓரளவு விடுபட்டு (டொமினியன் அந்தஸ்து) மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தில் மக்கள் ஆட்சி மலர்ந்தது. ஆனால் அந்த மக்கள் ஆட்சியில் பெரும்பான்மை கையுயர்த்தலில் சனநாயகம் முடங்கிவிட்டது. அதனால் அது தலையை எண்ணும் பெரும்பான்மை இன மக்களின் ஆட்சியாக மாறியது. சிறுபான்மையினரின் குடியுரிமை மொழியுரிமை நிலவுரிமை கல்வியுரிமை ஆகியவை கட்டங்கட்டங்களாகக் பெரும்பான்மை கையுயர்த்தலால் பறிக்கப்பட்டன. சோல்பறி அரசியலமைப்பில் சிறுபான்மையினருக்கிருந்த பிரிவு 29( C ) பாதுகாப்பு அம்சங்களும் 1972ம் ஆண்டைய குடியரசு அரசியலமைப்போடு அற்றுவிட்டது. தென்னிலங்கைப் பெரும்பான்மை இனத்தவர்களால் தமக்கேற்ற விதத்தில் அரசியல் அமைப்பு யாப்புக்கள் சிறுபான்மையினரின் ஒத்துழைப்பின்றி உருவாக்கப்பட்டன.

சமதர்மம் சட்டத்தின் முன் சகலரும் சமம் இயற்கை நீதிக் கோட்பாடுகள் மனிதவுரிமை மேம்பாடுகள் என்பன எண்ணிக்கையில் கூடுதலானவர்களின் எண்ணக்கருத்துக்கு அமைவாக சனநாயகம் என்ற போர்வையில் செயற்பாட்டிலிருந்தன. அதே சமயம் நாட்டின் அபிவிருத்தி வேலைகளும் மந்த கெதியில் இழுபட்டுக்கொண்டிருந்தன.

**மக்களாட்சியில் ஒரு மன்னராட்சி**

எதுவும் துரிதமாக நடைபெறுவதில்லை என எண்ணங்கொண்ட ஜே. ஆர். ஜெயவர்தன 1977ல் 4/5 பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைத்து அதிகாரத்திற்கு வந்தபோது அமெரிக்கா பிரான்ஸ் நாடுகளில் பிரயோகத்திலிருந்த நிறைவேற்று சனாதிபதி முறைமையை இலங்கைக்கு ஏற்றவாறு செயற்படுத்த வழியமைத்தார். இது மக்கள் ஆட்சிக்குள் ஒரு மன்னர் ஆட்சி போன்ற ஒரு புதிய நிருவாக ஆட்சி முறையின் ஆரம்பமாகியது. வரலாற்றில் முதற்தடவையாக சிறுபான்மையிரும் வாக்களித்து தெரிவாகும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி தெரிவானார். தேர்தல் முறைமையிலும் விகிதாசாரத் தெரிவு சிறுபான்மையினருக்கு சார்பானதாக கொண்டு வரப்பட்டது.

1987ல் ஒற்றையாட்சியில் முதற்தோற்றமளவில் மாகாண அதிகாரப் பகிர்வுக்கான ஒரு முறைமை இந்தியாவின் பங்களிப்போடு ஏற்படுத்தப்பட்டது. பாரிய மகாவலி கங்கை நீர்ப்பாசனத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி கூடுதலான நெல் உற்பத்திக்கு வித்திட்டார்.

**சனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக்காலம்**

முதலாவது பாராளுமன்றத்தின் மக்களாட்சிக் காலத்தில் (1947 – 1952) மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை இல்லாதாக்கப்பட்டு வாக்குரிமையற்றவர்களாயினர். ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி பிரேமாதாசாவின் காலத்தில் (1988 – 1992) மலையக மக்களின் குடியுரிமை வழங்கப்பட்டு வாக்களிக்கத் தகுதியானார்கள்.

மூன்றாவது பாராளுமன்றத்தின் மக்களாட்சி காலத்தில் (1956 -1960) ஆக்கப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் 1987ல் நிறைவேற்று சனாதிபதி காலத்தில் கொண்டுவரப்பட்ட 13வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலமும் 1988ல் கொண்டுவரப்பட்ட 16வது திருத்தத்தின் மூலமும் தமிழ் மொழி சிங்களத்துடன் தேசிய மொழியாகவும்(13வது திருத்தம்) வட-கிழக்கின் நிர்வாக மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் (16வது திருத்தம்) ஏற்கப்பட்டன.

இலங்கை குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டு இடம்பெற்ற மக்கள் ஆட்சிப் பாராளுமன்றத்தில் (1972 – 1977) கல்வியைச் சீரமைப்பு செய்தல் என்ற போர்வையில் தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழக பிரவேச உள்ளீர்ப்பு குறைக்கப்பட்டது. இதுவும் பின் நிறைவேற்று சனாதிபதி காலத்தில் சீராக்கப்பட்டு தற்போது முன்னேற்றமடைந்த பகுதி பின் தங்கிய பகுதியென வெட்டுப் புள்ளி நடைமுறை சகலருக்கும் ஓரளவு ஏற்புடையதாகவுள்ளது.

ஆனால் நிலவுரிமை மட்டும் அன்றும் இன்றும் நாளுக்கு நாள் நடைமுறையில் மோசமடைந்தவாறு காணப்படுகின்றது. முதலில் பாராளுமன்ற மக்கள் ஆட்சி காலத்தில் தமிழர் தாயகப் பிரதேசங்களிலுள்ள அரச காணிகளில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு செயற்பட்டு வந்த நிலைமையிருந்தது. பின் சனாதிபதி ஆட்சியில் 1990ம் ஆண்டுகளில் தமிழர்கள் தங்களது பூர்வீகக் காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு அகதிகளாக ஆக்கப்பட்டு வாழும் நிலைமைக்கு நிலவுரிமை மாற்றமடைந்தது. அவ்வாறு வெளியேற்றப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்ட காணிளை அரச முப்படையினரும் தங்களது விருப்பப்படி ஆண்டு அனுபவித்து வருகின்றார்கள். அதையும்விட யுத்தம் முடிவடையும் தருவாயிலும் யுத்தம் முடிவடைந்த பின்னரும் கூட பொது மக்களுடைய காணிகளும் அரச காணிகளும் ராஜபக்ஷ ஆட்சியில் கபலீகரம் செய்யப்பட்டுள்ளது.

**நல்லாட்சி என்பது ஆளும் அதிபரின் பண்பிலே அமைவது**

பிரேமதாசாவும் மஹிந்த ராஜபக்ஷவும் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட சனாதிபதியாக ஆட்சி புரிந்தார்கள். பிரேமதாச ஆட்சி தமிழர்களின் பல பிரச்சினைகளை தீர்த்து விட்டது என்பது மட்டுமல்லாமல் சனசவிய கம்உதாவ என ஏழை மக்களின் வாழ்க்கைத்தர உயர்ச்சிக்கு பல திட்டங்களை உருவாக்கினார்.இவர் ஆட்சி இலஞ்சம் ஊழல் மோசடிகாரர்களுக்கு சிம்ம சொர்ப்பனமாக விளங்கினார்.

ஆனால் ராஜபக்ஷ தமிழர்களின் பல பூர்வீகக் காணிகளைப் பறித்தெடுத்தவர் மட்டுமல்லாமல் இராணுவத்தினரைக் கொண்டு தமிழ் மக்களை அடிமைப்படுத்தினார். இலஞ்சம் ஊழல் மோசடி வீண்விரையம் என நாட்டையே சின்னாபின்னமாக்கியுள்ளார். பல கோடிப் பணத்தை முக்கியமாக சீனாவிடம் கடனாகப் பெற்று தேவையற்ற வேலைத்திட்டங்களில் வீண்விரையம் செய்து தற்போதைய நாட்டின் திறைசேரி நிதி நிலைமையையும் வெளிநாட்டு செலாவணியையும் மோசமாக்கியுள்ளார்.

ஆகையினால் மக்களாட்சிக்குள் ஒரு மன்னராட்சி என்ற நிறைவேற்று சனாதிபிதி ஆட்சிமுறையும் விகிதாசார தேர்தல் வாக்களிப்பு முறையும் சிறுபான்மை மக்களுக்கு நலன் சார்ந்ததாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஆளுபவர்களின் மனிதத்தன்மை மக்களுக்கு உதவும் மனித நேயம் கடமையுணர்வு என்ற சிறப்பம்சங்களைக் கொண்டவர்கள் நிறைவேற்று சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால் மட்டுமே சிறுபான்மையினருக்கு பாதிப்பிருக்காது என்பதுதான் உண்மை நிலைமை.

**(ஆ……..ர்)**